# ★ 1993ல் ஜனதிபதி அரசியல் பாதுகாப்பு துறைகளில் புதிய சவால்களை எதிர்கொள்வார்

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 84 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 4 இதழ் 312
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 19 — 12 — 1992

(கொழும்பு)
ஜனதிபதி ஆர். பிரேமதாசா புதிய வருடத்தில் பல அரசியல் சவால்களையும், சோதனைகளையும் எதிர்நோக்கவேண்டியிருக்கும்.

இதேவேளை நாட்டின் பாதுகாப்புத்துறையிலும் அவர் பலவிதமான சிக்கல்களையும் சமாளிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்.

அரசியல் இராணுவ அவதானிகள் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஜனதிபதிக்கு அரசியல்எதிர்ப்புகள் அதிகரித்து வருவதால் அவர் அரசியல்துறையில்சவால்களையும், சோதனைகளையும் எதிர்கொள்வார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## உணவுப்பொருள்கள் பதுக்கல்-விலை அதிகரிப்பால் பொதுமக்கள் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)
யாழ். குடா நாட்டில் பொதுமக்களின் உணவுப் பொருள்கள் அனைத்தும் திடீரென பதுக்கப்பட்டு விலை அதிகரித்ததையடுத்து பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

கிளாலிப் பாதை தடைப்பட்டதற்கும் பொருள்களின் விலை உயர்வுக்கும் எதுவித சம்பந்தமுமில்லையென்றும், போதியளவு உணவுப்பொருள் முன் கூட்டியே யாழ். மாவட்

(4ம் பக்கம் பார்க்க)

# படையினருடன்புலிகள்நேற்று அச்சுவேலி பகுதியில் கடும்சமர்

## ராணுவம் இழப்புகளுடன் முகாம் திரும்பியது!!

(யாழ்ப்பாணம்)
அகோர ஷெல் தாக்குதலை மேற்கொண்டவாறு நேற்றுக் காலை அச்சுவேலி, தொண்டமானாறு நோக்கி நகர முயற்சித்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் விடுதலைப்புலிகளின் கடுமையான தாக்குதலால் தமது முன்னேறும் முயற்சியைக் கைவிட்டு பலத்த இழப்புகளுடன் முகாம் திரும்பினர்.

நேற்றுக் காலை சுமார் 10 மணியளவில் பலத்த ஆட்லறி ஷெல் தாக்குதலை மேற்கொண்டவாறு முன்னேற முயன்ற இராணுவத்தினரை எதிர்த்து விடுதலைப்புலிகள் கடும் தொடுத்தனர். இடைக்காட்டுச் சந்தி, தொண்டமானாறு சந்தி ஆகிய இடங்களில் வைத்து தாக்குதல் இரு பகுதியினருக்கும் இடையே தொடர்ச்சியாக பல மணி நேரம் இடம்பெற்ற மோதல் நேற்று பிற்பகல்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஷெல்தாக்குதல் இருவர் பலி

(யாழ்ப்பாணம்)
வளலாய் பகுதியில் நிலை கொண்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நேற்றுக் காலை 7-30 மணி முதல் பி. ப. 2-15 மணி வரை மேற்கொண்ட அகோர ஷெல் தாக்குதலால் இருவர் கொல்லப்பட்டனர்

(4 ம் பக்கம் பார்க்க)

## 25 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
நேற்று இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் 25க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். 25 வீடுகள் பலத்த சேதமடைந்தன. கால் நடைகள் பல உயிரிழந்தன. தோட்டப் பயிர்ச்செய்கையும் நாசமாகியது.

இச்சம்பவத்தில் காயப்பட்டவர்களில் யாழ். போதனு

(4-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் இடம் பெயர்வு

(யாழ்ப்பாணம்)
வலலாயில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி நேற்று மேற்கொண்ட ஷெல், பீரங்கித் தாக்குதலினல் அச்சுவேலி தோப்பு, நவக்கிரி, இடைக்காடு பகுதிகளைச்சேர்ந்த ஆயிரக்கணக் மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## வழிபாட்டுத்தலங்கள் சேதம்

(யாழ்ப்பாணம்)
சிறிலங்கா படையினர் நேற்று நடாத்திய அகோர ஷெல் தாக்குதலால் கிறிஸ்தவ, இந்துக் கோவில்கள், கடைகள், வீடுகள் என்பன பலத்த சேதமடைந்துள்ளன.

பத்தமேனி சூசையப்பர் தேவாலயம், கதிரிப்பாயிலுள்ள இந்து ஆலயம், அச்சுவேலி சந்தியிலுள்ள தேனீர்க் கடை உட்பட பல வீடுகள் பலத்த சேதத்திற்குள்ளானது.

அச்சுவேலி-தோப்பு பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினல் வீடு ஒன்றும் எரிந்துள்ளது.

இதேவேளை அச்சுவேலி மகா வித்தியாலயத்திற்குஅருகிலும் இடைக்காடு, பத்தமேனி, பகுதிகளிலும்ஷெல்கள்வீழ்ந்து வெடித்தன.

சிறிலங்கா படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலினல் வல்லைப்பாலமும் பலத்த சேதமடைந்துள்ளது.

(க)

## பம்பலப்பிட்டி அகதிமுகாமை மூடிவிட நடவடிக்கை

(கொழும்பு)
கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலுள்ள அகதிமுகாமை மூடிவிடுவதற்கான நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இம்முகாமிலுள்ள தமிழ் அகதிகளை சொந்த இடங்களுக்கு திருப்பி அனுப்பும் முயற்சிகளை புனர்வாழ்வு அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இந்தஅகதிகளை அவர்களின்

(4-ம் பக்கம் பார்க்க)

## 5 ஆயிரம் பயணிகள் ஆலங்கேணியில் அவதி

(வவுனியா)
கிளாலிப் படகுச்சேவை தடைப்பட்டதையடுத்துயாழ். நகருக்குள் வருவதற்காக 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட பயணிகள் ஆலங்கேணிப்பகுதியில் தரித்து நிற்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நத்தார் - புதுவருட தினத்தைமுன்னிட்டு கொழும்பிலிருந்துவந்தபெருந்தொகை

(4-ம், பக்கம் பார்க்க)

## போர்நிறுத்தம் ஒன்றை அரசு மேற்கொள்ளும்?

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுக்கும்-சிறிலங்கா அரசுக்குமிடையில் விரைவில் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்று நடைபெறவிருப்பதாக வெரித்தாஸ் வானெலி நேற்று தெரிவித்தது.

இலங்கையில் இன்றைய அரசியல் பரபரப்பை அவதானிக்கும் போது யுத்த

(4-ம் பக்கம் பார்க்க)

## ரெனியின் வருகை அமைச்சரவையை மாற்றும்

(கொழும்பு)
முன்னுள் நிதி அமைச்சர் திரு. ரெனி டி மெல்லின் வருகை மூலம் அமைச்சரவையில் விரைவில் பெரும் மாற்றங்கள் நிகழவிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது பிரதம மந்திரியாக இருக்கும் திரு. டி. பி.

4ம் பக்கம் பார்க்க)

## அயோத்தி விவகாரம்: உத்தரப்பிரதேச முதல்வருக்கு நீதிமன்று ஆணைபிறப்பிப்பு

(லண்டன்)
இந்தியாவின் உத்தரப் பிரதேச முன்னுள் முதல் அமைச்சரையும் மற்றும் ஆறு மூத்த அதிகாரிகளையும் உயர் நீதிமன்றத்தின்முன் ஆஜராகும்படி நேற்று நீதிமன்றம் ஆணை விடுத்துள்ளது.

பாபர் மசூதிக்கு எக்கார

(4-ம் பக்கம் பார்க்க)

## ராவின் அரசியல் எதிர்காலம் 22ம் திகதி தெரிந்துவிடும்

(புதுடில்லி)
பாபர் மசூதி இடிக்கப்பட்டது சம்பந்தமாக பிரதமர் நரசிம்மராவ் மீது எதிர்கட்சிகள் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் செவ்வாய்கிழமை இந்திய நாடாளுமன்றத்தில் நடைபெறுமென்று சபாநாயகர் நேற்றுத் தெரிவித்தார்.

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### மிருதங்கம்

மிருதங்க திருத்த வேலைகள் சுத்தமான முறையில் நல்ல நாதத்துடன் குறித்த தவணையில் செய்துகொடுக்கப்படும் கோவிந்தபிள்ளை விஜயகுமாரி மிருதங்க தொழில் நிலயம், 192/1 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-7070)

### நீ மோல் - கிருமி நாசினி

ஒரு சிறந்த கிருமி நாசினி, மலசலகூடத்திற்குப் பாவிக்கச் சிறந்த டீலன். அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகின்றது. விலை ரூபா 70/- மட்டுமே, மில்க்வைற். (ஏ-2689)

### ஆனந்தா கலண்டர்

எல்லா விபரங்களும் அடங்கிய ஆனந்தா பஞ்சாங்கக் கலண்டர் 1993. மலிவு விலை ரூபா 30-00 மட்டுமே. (எ-2696)

### புதிய வகுப்புக்கள்

1993 கல்வியாண்டிற்கான புதிய வகுப்புகள் ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் நடைபெறுகின்றன. ஆண்டு 9, 10, 11 ற்கு வர்த்தக பாடமும், ஆங்கில இலக்கியமும் (Eng. Literature) 19-12-92 சனி ஆரம்பமாகிறது. ஆண்டு 4, 5 (புலமைப் பரிசில்) புதிய பிரிவுகள் திறமை அடிப்படையில் 19-12-92 சனி மு. ப. 8-00 பி. ப. 3-00 நேரங்களில் நடைபெறும். புதிய கல்வி நிலயம், 219. நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (எ 2697)

### பொதுக்கூட்டம்

(நெல்லியடி)

கோப்பாய் தெற்கு விளையாட்டரங்க வீதி, சரஸ்வதி சனசமூக நிலய வருடாந்தப் பொதுக்கூட்டம். எதிர்வரும் 27ம் திகதி பி.பகல் 2 மணிக்கு நிலயத்தலைவர் திரு. எஸ். கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது. (160)

## இராசி பலன்

19-12-1992

(தமிழுக்கு மார்கழி 04)

சனிக்கிழமை

தசமி மு. ப. 10.28 வரை. சித்திரை பி. ப. 3-43 வரை. மரணயோகம் இராகுகாலம் மாலை 9-24 முதல் 10.54 வரை. சுபநேரம் மாலை 3.24 முதல் 4.54 வரை.

மேடம்: பயண ஈடுபாடு, நண்பர் சந்தோசம், தொழில் வெற்றி.

இடபம்: பொருள் வரவு, புதிய ஸ்தானம், மனமகிழ்ச்சி

மிதுனம்: தொழில் விரோதம், நோய் கஷ்டம், குடும்ப கவலை.

கடகம்: கடன்பழு, காரிய அலைச்சல், அகாலபோஜனம்.

சிங்கம்: மித்திரர் பேதம், புதிய முதலீடு, காரியஜெயம்.

கன்னி: மனப்போராட்டம், தடுமாற்றம், குடும்ப விரோதம்.

துலாம்: குடும்ப சுகம், இனசன மகிழ்ச்சி. தெய்வீகச் செலவு

விருச்சிகம்: செய்தொழில் நஷ்டம். குடும்பப் பிரிவு, வேண்டாத தொல்லை.

தனுசு: வீரச்செயல், உல்லாசச் செலவு, சகோதர பாசம்.

மகரம்: தொழில் பாராட்டு, வெளியூர்செய்தி, மனவொற்றுமை.

கும்பம்: பகைவர் துன்பம், பணமுடை, தீராத பிரச்னை.

மீனம்: இனசன விரோதம், அடிபணிதல், ஏமாற்றம்.

— ஜோஸ்யர்

## பீரங்கித் தாக்குதல்

(புலோலி)

பொலிகண்டி, சக்கோட்டை கடல் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை பீரங்கி கப்பல் ஒன்று பீரங்கி வேட்டுக்களைத் தீர்த்தது.

இத்தாக்குதலினால் மீனவர்கள் அவசர அவசரமாக கரை ஒதுங்கினார்கள். இந்த பீரங்கி வேட்டுக்கள் தரைப்பகுதியிலும் விழுந்துவெடித்தன. (61)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் அமரர் ஈ. கே. குமரையாவின் ஞாபகார்த்தமாக 9 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டி இன்று ஆரம்பமாகின்றது

அரியாலை சனசமூக நிலய மைதானத்தில் இன்று பிற்பகல் நடைபெறும் இப்போட்டிகளின் முதலாட்டத்தில் சென். அன்ரனிஸ் கழகத்தை எதிர்த்து பொற்பதி ஐக்கிய கழகமும், இரண்டாவது ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய கழகத்தை எதிர்த்து சென். நீக்கிலஸ் கழகமும் மோதும். (வ)

## பரீட்சையில் சித்தி

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் 5ம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் 8 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

ஃ ஃ

(கொழும்புத்துறை)

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் ஆறுமாணவர்கள் சித்தியெய்தியுள்ளனர் (154)

ஃ ஃ

(ஆனைப்பந்தி)

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் புங்குடுதீவு கொத்தணிப் பிரிவில் இரண்டு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். புங்குடுதீவு சிறி கணேசமகா வித்தியாலயத்தில் ஒரு மாணவியும் புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிசன் வித்தியாலயத்தில் ஒரு மாணவனும் சித்தியடைந்துள்ளனர். (101)

ஃ ஃ

(தாளையடி)

ஆண்டு ஐந்து புலமைப் பரிசிலில் நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் இருந்து இரு மாணவர்களும் உடுத்துறை மகா வித்தியாலத்திலிருந்து ஒருவரும் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா மகா வித்தியாலயத்திலிருந்து ஒருவரும் சித்தியடைந்துள்ளனர். (163)

## சிறுவர்பராமரிப்பு நிலையம்

(மானிப்பாய்)

யாழ். சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு அலுவலகம் கடந்த 17ந் திகதி முதல் யாழ் செயலகத்தில் இயங்கி வருகின்றது.

இந்த அலுவலகம் முன்னர் யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதியில் இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

## தமிழீழ மீட்பு நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதி சேகரிப்பு நாளை 20ம் திகதி பின்வரும் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெறும்.

கோப்பாய்-நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி காலை 9 மணி முதல் பி. ப. 3 மணி வரை. தெல்லிப்பழை-மல்லாகம் ம. வி. மாலை 3 30 முதல் 4.15 மணி வரை. (சி)

## இ. தொ. கா. உயர் மட்டக் கூட்டம்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிலிருந்து வெளியேறிய சில உறுப்பினர்கள், மாற்றுத் தொழிற் சங்கம் ஒன்றில் சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களது வெளியேற்றம் தொடர்பாக ஆராய்வதற்கான இ. தொ. கா வின் உயர் மட்டக் கூட்டம், காங்கிரஸ் தலைமைக் காரியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. (ரி)

## தையல் பயிற்சிக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பயிற்சித் திட்டத்தின் கீழ் 6 மாத காலத் தையல் பயிற்சி பெற்ற 40 இளம் யுவதிகள், தமது பயிற்சியை முடித்துக்கொண்டதுடன் ஓர் கண்காட்சியை நடத்தவுள்ளனர்.

இக்கண்காட்சி இன்று சனிக்கிழமை காலை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. இந்நிகழ்ச்சியில் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் இணைப்பாளர் திரு. பாலகிருஷ்ணன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கின்றார். திருமதி சரோஜா சிவச்சந்திரன், தேசிய இளைஞர் சேவை அதிகாரி திரு. எஸ். கார்த்திக், திரு. அ. சக்திவேல் ஆகியோரும் இக்கண்காட்சியில் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.


## யாழ்ப்பாணம்

அரசினர் பொதுவைத்தியசாலைக்குத் தனிப்பட்ட பாதுகாப்புச் சேவைக்கான ஒப்பந்தத்துக்கு

## விண்ணப்பம் கோரல்

யாழ். அரசினர் பொது வைத்தியசாலையில் தனியார் பாதுகாப்புச் சேவையை நடாத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சினால் / அரசாங்க அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட பாதுகாப்புச்சேவை. நிறுவனங்களிடமிருந்து 01-01-93 இலிருந்து 31-12-93 வரைக்கும் பாதுகாப்பு சேவைக்கு இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இம்மாதம் 28ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கத்தக்கதாக எனக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். எல்லா விண்ணப்பங்களுடனும் பாதுகாப்பு அமைச்சினால் / அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின்பிரதி இணைக்கப்பட்டிருத்தல்வேண்டும்

டாக்டர் செல்வி ந. கனகரத்தினம்

பணிப்பாளர்

அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
1992-12 15.

(ஏ-2693)


தபால் அத்தியட்சகர்

## கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கான தபால் பொதிகளை எடுத்து வருவது பற்றி தபால் திணைக்கள உயரதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்காக வடக்கு கிழக்கு மாகாண தபால் அத்தியட்சகர் திரு. எஸ். சேதுகாவலர் கொழும்பு சென்றுள்ளார்.

இவர் நேற்றுமுன் தினம் மாலை 3 மணியளவில் பருத்தித்துறை சென்று அங்கிருந்து பலாலிக்குச் சென்று விமானம் மூலம் கொழும்பு பயணமானார்.

## சேவை முன்பயிற்சி

(யாழ்ப்பாணம்

பட்டதாரி பயிலுனர் பரீட்சைக்குத்தோற்றி புள்ளிகளுடன் கூடிய பெறுபேறுகளை பரீட்சைத்திணைக்களத்திலிருந்து பெற்றவர்களும், முன் சேவைப்பயிற்சிக்கென கொட்டகலைக்கு அழைக்கப்பட்டு அங்கு செல்ல முடியாது தற்பொழுதும் யாழ். மாவட்டத்தில் தங்கியிருக்கும் விண்ணப்பதாரிகளும் இம்மாதம் 21-ம் திகதிக்கு முன்னர் தாம் வதியும் இடத்தில் அமைந்த பிரதி கோட்ட கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் தங்கள் பெயர்களை பதிவு செய்யுமாறு யாழ் மாவட்ட கல்வி பணிப்பாளர் கேட்டுள்ளார். (159)

## சேவை நலன் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வைத்தியசாலையில் டாக்டர்களாகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற வைத்திய கலாநிதிகளான திருமதி தி. கோபாலரத்தினம், திரு. மு. தியாகேசபிள்ளை மற்றும் சேவைமாற்றம் பெற்ற வைத்திய கலாநிதி யோகவிநாயகம் ஆகியோரின் சேவை நலம் பாராட்டு விழா கோப்பாய் வைத்திய அதிகாரி பி. ஜே. ஜீவானந்தம் தலைமையில் ஆஸ்பத்திரி முன்றலில் நாளை 20ம் திகதி நடைபெறும்.

## கணக்காளர் சங்கம்

[மானிப்பாய்]

யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களில் பணிபுரியும் கணக்காளர்கள் அண்மையில்சங்கமொன்றை அங்குரார்ப்பணம் செய்துவைத்துள்ளனர்.

இச்சங்கத்தின் தலைவராக யாழ். செயலக பிரதான கணக்காளர் திரு. சி சிவபாலனும் செயலாளராக செயலக புனர்வாழ்வுப் பிரிவுக் கணக்காளர் த. அரியரத்தினமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். [71]

கம்புமா

## பயன்பாடு பற்றி செய்முறை பயிற்சி

(யாழ்ப்பாணம்)

அதிக விளைச்சலையும், இலகுவாகப் பயிரிடக் கூடியதுமான கம்பு தானியம் பற்றி மக்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன், கம்பு மாவிலிருந்து பிட்டு, லட்டு, கழி, கஞ்சி மற்றும் ஏனைய சிற்றுண்டி வகைகள் தயாரிக்கும் செய்முறை பயிற்சி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் வழங்கப்பட்டு வருகின்றது.

வலிகாமம் கேட்டம் தென்மராட்சி கோட்டம், தீவகக் கோட்டம் ஆகிய பகுதிகளில் கிராமிய உற்பத்திக் குழுக்களூடாக தெரிந்தெடுக்கப்பட்ட 24 மகளிருக்கு செய்முறை பயிற்சியும் விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது.

33 குடும்பங்களை

## கைதடியில் குடியமர்த்த ஏற்பாடு

(வட்டுக்கோட்டை)

இராணுவ நடவடிக்கைகளால் மாதகல், சிறுவிளான் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்துவந்து சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் தஞ்சமடைந்திருக்கும் 33 குடும்பங்களையும் கைதடிப் பகுதியில் குடியமர்த்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது (139)

செஞ். பிரதிநிதிகள்

## மாதம் இருமுறை தீவகம் பயணம்

(யாழ்ப்பாணம்)

பிரதிமாதமும் இருதடவைகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் தீவுப்பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளனர்

இவ்விஜயத்தின் போது தீவுப்பகுதிக்கான தபால் பொதிகளையும் அவர்களே எடுத்துச்செல்வார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (159)

## புலமைப்பரிசில்

(நல்லூர்)

நல்லூர் முருகன் சன சமூக நிலயத்தினர் தமது எல்லைக்குட்பட்ட பகுதியில் க.பொ.த சாதாரண பரீட்சையில் ஆகக்கூடிய திறமைச் சித்திகளை பெற்றவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கி பாராட்டியுள்ளனர்.

இப்புலமைப் பரிசில்களை செல்வி தயானி, நாகச்சந்திரா செல்வன் ஜெ. சிவானந்தன், செல்வன் உ. செந்தூரன், செல்வன் கோ. குமரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். (158)

## தர்மகர்த்தா சபை விளக்கம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சூராவத்தை முத்துமாரியம்மன் கோவில் தர்மகர்த்தா சபை தொடர்ந்து இயங்க முடியாதிருப்பதால் ஆலய பூசைகள் இடையூறின்றி நடைபெற வசதியாக பொறுப்புகளை ஆலய பிரதம குருக்களிடம் ஒப்படைத்துள்ளார்கள். அவர்கள் "ராஜினாமா" செய்ததாக வெளிவந்த செய்தி தவறானது எனவும் தெரிவித்துள்ளனர்.

## மரம் நடுகை

(நல்லூர்)

வட்டுக்கோட்டை இந்து இளைஞர் கலாசார மன்றம் தமது வளாகத்தினுள் மரம் நாட்டு வைபவம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

மன்றத் தலைவர் சிவலிங்கம் ரூபன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் சர்வோதய அதிகாரிகள், போரூட் அமைப்பாளர்கள், தொழில்அதிபர் திரு. க. கனகராசா ஆகியோர் கலந்துகொண்டு பயன்தரு மரங்களை நாட்டினர். (153)

## வரவு - செலவுத் திட்டம் நிறைவேறியது

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் ஐ.தே.க. அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் 65 அதிகப்படியான வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 129 வாக்குகளும் எதிராக 64 வாக்குகளும் அளிக்கப்பட்டன. (க)

## மட்டு, அம்பாறை, பொலநறுவ மாவட்டங்களில்
# மழை, வெள்ளப்பெருக்கு ஒருலட்சம் பேர் இடம்பெயர்வு
## குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயம்

(மட்டுநகர்)

மட்டக்களப்பு, அம்பாறை. பொலநறுவ மாவட்டங்களில் ஐந்து நாட்களாக தொடர்ந்து பெய்த மழையினால் பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பெரிய குளங்களில் ஒன்றான வடமுனைக்குளம் உடைப்பெடுத்துள்ளதனால் வாழைச்சேனை, கிரான், சித்தாண்டி ஆகிய பகுதிகளிலுள்ள தாழ்ந்த பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

காத்தான்குடி, மஞ்சந்தொடுவாய், மண்டூர், ஏறுவூர் மற்றும் மட்டக்களப்பு நகருக்கு அண்மையிலுள்ள இருதயபுரம், தாண்டவன்வெளி ஆகிய குடியிருப்புப் பகுதிகளில் பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

நவகிரி, உறுகாமம், உன்னிச்சை ஆகிய குளங்களும் நிரம்பி வழிந்து, உடைப்பெடுக்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் ஒருலட்சம் மக்கள் தமது வீடு வாசல்களை விட்டு வெளியேறியுள்ளதாக மட்டு. மாவட்ட அரசாங்க அதிபர் ஆர். மோனகுருசாமி தெரிவித்துள்ளார்.

இதேவேளை வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு மட்டு. மாவட்டத்திற்கு மேலும் முப்பது லட்சம் ரூபா சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ரி)

## இந்தியாவில் சில மாநில மக்களுக்கு அடையாள அட்டைகள்

(புதுடில்லி)

இந்தியாவின் சில மாநிலங்களில் பாதுகாப்புக் கருதிக் குறிப்பிட்ட எல்லைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு அடையாள அட்டைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பஞ்சாப், காஷ்மீர் மற்றும் வட-கிழக்கு மாநிலங்களில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## சங்க கூட்டம்

(ஆனைப்பந்தி)

புங்குடுதீவு வடக்கு கிராம அபிவிருத்திச்சங்கத்தின் அங்கு சார்ப்பணக்கூட்டம் அண்மையில் யாழ் கில்னர் ஒழுங்கையிலுள்ள அமெரிக்க மிஷன் வித்தியாலயத்தில் நடைபெற்றது (101)

## செயலகத்தில் ஒளிவிழா

(மானிப்பாய்)

யாழ். செயலகத்தில் எதிர்வரும் 23ம் திகதி புதன்கிழமை ஒளிவிழா கொண்டாடப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை செயலக நலன் புரிச்சங்கம் மேற்கொண்டு வருகின்றது. (71)

## பொதுக்கூட்டம்

(நல்லூர்)

நல்லூர் முருகன் சன சமூக நிலைய வருடாந்த பொதுக் கூட்டம் இம்மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மேற்படி நிலைய மண்டபத்தில் காலை 9-00 மணிக்கு தலைவர் சொ. கதிரமலை தலைமையில் நடைபெறும். (158)

# 40 சுதந்திரகட்சி எம்.பிக்கள் கட்சிக் கட்டுப்பாட்டை மீறினர்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சிக் கட்டுப்பாட்டையும் மீறி நடந்துள்ளார்களாம்.

இதையடுத்து இவர்களை கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கடுமையாக எச்சரித்துள்ளார்.

கட்சியில் நிலவும் உட்கட்சி போரினாலும், தலைமைத்துவ போட்டியினாலும், மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற பிரதம கொறடாவான திரு. றிச்சர்ட் பத்திரானவை அப்பதவியிலிருந்து நீக்க திருமதி சிறிமா மேற்கொண்டு வரும் முயற்சிகளையடுத்தே மேற்படி 40 எம். பிக்களும் கட்சிக் கட்டுப்பாட்டை மீறியுள்ளார்களாம்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட எம். பிக்களுக்கு கட்சித் தலைமைப்பீடம் எச்சரிக்கை கடிதங்களை அனுப்பியுள்ளது. (க-சி)

## 108 அஞ்சல் திணைக்கள ஊழியருக்கு பதவி உயர்வு

(மானிப்பாய்)

அஞ்சல் திணைக்களத்தில் 108 உத்தியோகத்தர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் கொழும்பில் நடைபெற்ற பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம், அஞ்சல் அலுவலகங்களில் உப அஞ்சல் அதிபர்களாக இருந்தவர்கள் 2ம் தர அஞ்சல் அதிபர்களாகவும், சிற்றூழியர்களாகக் கடமையாற்றியவர்கள் உப அஞ்சல் அதிபர்களாவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (71)

## மருந்து தட்டுப்பாடு

(நெல்லியடி)

கரவெட்டி அம்பன் அரசினர் வைத்தியசாலையில் இருமல், தடிமன், காய்ச்சல் போன்ற நோய்களுக்கான குளிகைவகைகளுக்கும், விட்டமின் சீ, ஊசி மருந்துக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (160)

## கடலகவளம் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கடலகவளம் சார் கல்வி கற்பிக்கும் யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கான ஒரு நாள் அறிமுகக் கருத்தரங்கு யாழ். பல்கலைக் கழகத்தில் விலங்கியல் துறை விரிவுரை மண்டபத்தில் இன்று 19ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா, யாழ். கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் ஆகியோர் இக்கருத்தரங்கை ஆரம்பித்து வைப்பார்கள்.

## இந்திய கிரிக்கெட் அணி தொடர்ந்தும் தோல்வி

(ஜொகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து வரும் இந்தியக் கிரிக்கெட் அணி, 6வது சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியிலும் தோல்வியைத் தழுவி 5-1 என்ற அடிப்படையில் உள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற 6வது ஒரு நாள் போட்டியில் முதலில் ஆடிய தென்னாபிரிக்கா, 50 ஓவரில் 216 ஓட்டங்களைப் பெற்றது. இந்திய அணி 47.5 ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 177 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இதேவேளை கிறகாம்கூச் தலைமையிலான இங்கிலாந்து அணி, இம்மாதம் 28ம் திகதி இந்தியா வரவுள்ளது. (சி)

## இன்று

(மானிப்பாய்)

மானிப்பாய் சத்திய சாயி நிலையத்தினர் இன்று 19-ம் திகதி சனிக்கிழமை பி. ப. 3 மணிக்கு சாயி நிலையத்தில் ஒளி விழா கொண்டாடவுள்ளனர். (71)

★

(வட்டுக்கோட்டை)

சித்தன்கேணி கலைநகர் நேருஜி மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் புனரமைப்புக் கூட்டம் மாதர் சங்கத்தலைவி செல்வி பரமேஸ்வரி நவரத்தினம் தலைமையில் இன்று சனிக்கிழமை மாதர்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [139]

★

(யாழ்ப்பாணம்)

இன்று 19ம் திகதி காலை 10 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைத் தலைமையகத்தில் சர்வதேச செஞ்சிலுவைக்குழுபற்றி சிறப்புக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு வைத்தியசாலைத் தொண்டர்களுக்கான கருத்தரங்கும் செய்முறையும் சர்வதேச செஞ்சிலுவைக்குழுவினால் நடாத்தப்படவுள்ளது. (154)

★

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி .குரும்பசிட்டி கிழக்கு கிராமசேவை அலுவலர் பிரிவுகளை நிரந்தர வதிவிடமாகக் கொண்டு இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் இலவசமாக வழங்கப்படவுள்ள பாடசாலைச் சீருடை விநியோகம் இன்று சனிக்கிழமை பி. ப. 3 மணிக்கு மருதனார்மடம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் இடம்பெறும்.

கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகவும் வலிகாமம் வடக்கு உதவி அரச அதிபர் திரு. கா சந்திரராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

# நிரந்தர தீர்வு எட்டும் வரை வடக்கு-கிழக்கு இணைப்பை கடைப்பிடிக்க வேண்டும்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிரந்தரமாக இணைக்க அரசுக்கு விருப்பமில்லையானால் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலான தற்காலிக இணைப்பையாவது பிரச்னைக்கு நிரந்தர தீர்வு எட்டும்வரை கடைப்பிடிக்கவேண்டும்.

மட்டு. மாவட்ட த. வி. கூட்டணி எம். பி. ஜோசப் பரராசசிங்கம் கடந்த புதன்கிழமை நாடாளுமன்றில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (க)

## ஐ. நா. அமைதிப்படை கம்போடியாவில் பணயம்

(நியுயோர்க்)

கம்போடியாவில் நிலைகொண்டுள்ள ஐ. நா. அமைதிப் படை வீரர்கள் 21 பேர் பணயக் கைதிகளாக, கம்போடியத் தீவிரவாதிகளால் பிடித்து வைக்கப்பட்டுள்ளதாக ஐ நா. அறிவிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கம்போடியத் தீவிரவாதிகளால் இராணுவத்தினர் கைதிகளாகப் பிடிபடுவது, சமீப காலமாக நடைபெற்று வரும் ஒரு தொடர் நிகழ்ச்சி என்றும் கூறப்படுகிறது.

மேலும் கம்போடியாவில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முகமாக ஐ. நா. அமைதிப் படையினர் கம்போடியாவில் நிலைகொண்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## துபாயிலிருந்து 200 பாகிஸ்தானியர்கள் நாடு கடத்தப்பட்டனர்

(லண்டன்)

துபாய் அரசாங்கம் 200 பாகிஸ்தானியர்களை நாடு கடத்தியது என்று தெரிவிக்கப்படுகிறது.

பாபர் மசூதி நிர்மூலமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக துபாயில் பாகிஸ்தானியர்கள், அஞ்சி வாழ்ந்த இந்தியர்கள் மீது தாக்குதலில் ஈடுபட்டதனாலேயே துபாய் அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது என்று கூறப்படுகிறது.

துபாயில் உள்ள இந்தியர்களின் கடைகள், வீடுகள் பாகிஸ்தானியர்களால் தாக்கப்பட்டதென்றும் மேலும் பல பாகிஸ்தானியர்கள் இது சம்பந்தமாக துபாய்ச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும் செய்திகள் கூறுகின்றன. (சு)

## சின்னக் கருவேலம் விதைகள் தூவப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் 1986ம் ஆண்டுப்பகுதியில் தூவப்பட்ட சின்னக்கருவேலம் மரவித்துக்கள் தற்பொழுது வேகமாக வளர்வதுடன் பல்கிப் பெருகியும் வருகின்றன.

அதிவேக வளர்ச்சி, உவர் சவர் தன்மைகளைத் தாங்கி வளர்வதுடன் அத்தகைய நிலங்களை நன் நிலமாக மாற்றுதல் விறகுத் தேவையைப் பூர்த்தி செய்தல் மற்றும் மண் பாதுகாப்பு போன்ற நோக்கங்களுக்கமையவே இம் மரங்களைப் பெருக்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இவ்வருடம் ஜூலை மாதம் நடுப்பகுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் சுமார் எண்பதாயிரம் ரூபா பெறுமதியான சின்ன கருவேலம் விதைகள் மன்னார்பகுதியிலிருந்து பெறப்பட்டன.

இவை தற்பொழுது யாழ். குடாநாட்டில் வல்லை, நாவற்குழி வெளிகளிலும் மற்றும் பொருத்தமான இடங்களிலும் தூவப்படுகின்றன.

இதேபோன்று கிளிநொச்சி, வவுனியா, மணலாறு, மன்னார் மாவட்டங்களிலும் பொருத்தமான இடங்களில் சின்ன கருவேலம் விதைகள் தூவப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## மினிபஸ் சேவையாளருக்கு 15,000 ரூபா கடனுதவி

(மானிப்பாய்)

தனியார் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள உயரம் குறைந்த சிறிய பஸ்கள் உயரம் கூடிய பஸ்களாக மாற்றி அமைக்கப்படவுள்ளன.

இதற்கென 15 ஆயிரம் ரூபா கடனுதவியை பஸ் சொந்தக்காரர்களுக்குவழங்குவதற்கு அரசு முன்வந்துள்ளது.

போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள தனியார் வாகனங்களில் சுமார் 50 சதவீதமானவை 5 அடி 4 அங்குல உயரமாக இருக்கின்றன. இதில் பிரயாணிகள் நின்று கொண்டு பிரயாணம் செய்வது கடினமாக இருப்பதாக தனியார் போக்குவரத்துச் சேவை பஸ் சங்கங்களின் சம்மேளனத்திற்கு சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து இவற்றை 5 அடி 8 அங்குல உயரமாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (71)

# இஸ்ரேஸ்400 ■லஸ்தீனியரை நாடு கடத்தியது

(ரெக்அவில்)

இஸ்ரேலிய அரசினால் நேற்று முன்தினம் நாடு கடத்தப்பட்ட 400 க்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலிய லெபனான் வீதிகளில் அநாதரவாக திரிந்து கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பாலஸ்தீனியர்களை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட்ட இஸ்ரேலிய துருப்புகள் ஆகாயத்தைநோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாலஸ்தீனியர்கள் லெபனானுக்குள் நுழைய முற்பட்டபோது லெபனான் துருப்புகள் அவர்களை விரட்டியடித்ததாகவும் கூறப்படுகிறது.

லெபனான் அரசும், பாலஸ்தீனியர்கள் தனது நாட்டிற்குள் நுழைவதை தடுக்கும் முகமாக இரண்டு மீற்றர் உயரத்திற்கு தடையை எழுப்பியுள்ளது.

இஸ்ரேலிய படை வீரரை கடத்தி, கடந்த ஞாயிற்றுக்கிழமைகொலைசெய்த ஹமாஸ் என அழைக்கப்படும் முஸ்லிம் அடிப்படை தீவிரவாதக் குழுவுடன் மேற்கூறப்பட்ட பாலஸ்தீனியர்கள் தொடர்பு வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்களை நாட்டைவிட்டு இஸ்ரேல் வெளியேற்றியதாகக் கூறப்படுகிறது. (க)

## ராவ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாக்கெடுப்பில் முன்னாள் பிரதமரான திரு. வி. பி சிங்கின் கட்சியான தேசிய முன்னணி கலந்துகொள்ள மாட்டாதென அறிவித்துள்ளது.

## படையினருடன்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

2-15 மணி வரை நீடித்தது.

விடுதலைப்புலிகளின் தொடர்ச்சியான தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத ஸ்ரீலங்காப் படையினர் பலத்த இழப்புகளுடன் முகாம் திரும்பினர்.

இம்மோதலில் வளலாய், அச்சுவேலியைச் சேர்ந்த விடுதலைப் புலிகளின் ஆதரவாளரான சின்னத்தம்பி வீரசிசாவை தழுவிக்கொண்டார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர். (ஈ-56-159-)

## பம்பலப்பிட்டி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தும் சாத்தியம்பற்றி புனர்வாழ்வுஅமைச்சு மீண்டும் ஆராய்ந்து வருகிறது.

இவர்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிய பின்னர் இம்முகாம் மூடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ரி)


திருநெல்வேலி

## சைவ வித்தியாவிருத்திச் சங்கம்

பொதுமுகாமையாளர் வே. குகதாஸ்

## தற்காலிக இடைநிறுத்தம்

கடந்த 16-12-1992 நிகழ்ந்த இயக்குனர்சபைத் தீர்மானத்தின்படி சிறுவர் நிறைவாழ்வு இல்லத்தில் இதுவரை காலமும் பொதுமுகாமையாளராகக் கடமையாற்றிவந்த வே. குகதாஸ் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளார்.

இதனால் பொதுமுகாமையாளர் மேற்படி சங்கத்தோடு தொடர்பான கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு 17-12-1992ல் இருந்து மறு அறிவித்தல்வரை மேற்படி சங்கத்தால் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இவரோடு தொடர்பான எந்தவித கொடுக்கல் வாங்கல்களுக்கும் சங்கம் பொறுப்பேற்றுக்கொள்ளாது என்பதை அறியத்தருகின்றோம்.

திரு. க. சிவானந்தமூர்த்தி,
கௌரவ செயலாளர்,
இயக்குனர் சபை சார்பில்.

(ஏ-2694)



திருநெல்வேலி

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

## விசேட அறிவித்தல்

### மீண்டும் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளல்

கடந்த 16-12-1992 நிகழ்ந்த இயக்குனர் சபைத் தீர்மானத்தின்படி சிறுவர் நிறைவாழ்வு இல்லத்திலிருந்து அண்மைக்காலத்தில் பல்வேறு காரணங்களுக்காக வெளியேற்றப்பட்ட மாணவ, மாணவிகளை மீண்டும் இல்லத்தில் வந்து சேர்ந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இயக்குனர்சபை சார்பில்,
க. சிவானந்தமூர்த்தி.

செயலாளர்,
சைவ வித்தியாவிருத்திச் சங்கம்,
திருநெல்வேலி.

(எ-2695)



இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a New Paper at the General Post Office, Sri Lanka under Licence Number B/10336/8


# அத்வானி தற்கொலைப் படை தாக்குதலுக்கு இலக்காகலாம்?

(புதுடில்லி)

பாபர் மசூதி இடிக்கப்பட்டதையடுத்து தற்போது தடுப்புக்காவலில் இருக்கும் பாரதீய ஜனதாகட்சித் தலைவர்களான திரு. எல். கே. அத்வாணி, டாக்டர்முரளிமனோகர்ஜோஷி போன்றோருக்கு சிறைச்சாலைக்குள் தற்கொலைப்பிரிவினரின் தாக்குதல்கள் நிகழக்கூடுமென்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

தீவிரவாத முஸ்லீம்களால் இத்தாக்குதல்கள் நிகழக்கூடுமென்ற காரணங்களினால் பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர்களுக்கு சிறைச்சாலையில் மிகப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதே நேரம் நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட சம்பவத்திற்கு ஜனதாக்கட்சி உறுப்பினர்கள் முதன் முறையாக மன்னிப்புக் கோரியுள்ளனர்.

## ரெனியின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விஜயதுங்காவின் பதவிக்கு திரு. ரெனி டி மெல் நியமிக்கப்படலாமென்றும், திரு. விஜய துங்காவுக்கு வேறு அமைச்சர் பதவியோ அல்லது வெளிநாடுகளின் உயர் ஸ்தானிகர் பதவிகளோ வழங்கப்படக்கூடுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

## போர்நிறுத்தம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தம் ஒன்று ஏற்படும் சாத்தியக்கூறுகள் தென்படுவதாக அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்து வருவதாகவும் விடுதலைப் புலிகளுடன் தாம் எந்தவொரு ரகசியப் பேச்சுக்களை நடாத்தியதும் இல்லை. இனிமேலும் நடாத்தப் போவதுமில்லை என்று அரசு கூறிவருகின்ற போதிலும் புலிகளுடனான இரகசியப் பேச்சுக்களை அரசு நடாத்தி வருகின்றதென்றே செய்திகள் தெரிவிப்பதாக வெரித்தாஸ் வானொலி மேலும் தெரிவித்தது. (வி)

## மக்கள் இடம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் மூட்டை முடிச்சுகளுடன் சைக்கிள்களிலும், கால்நடையுமாக சென்றதை காணக்கூடியதாக இருந்தது.

இவ் அகதிகள் ஆவரங்கால், புத்தூர், சிறுப்பிட்டி, நீர்வேலி கோப்பாய் பகுதிகளை வந்தடைந்தனர்.

அகதிகள் இடம்பெயர்ந்து கொண்டிருந்தவேளையிலும் படையினரின் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததில் பலர் காயமடைந்தனர்.

இராணுவத்தினர் பின்வாங்கியதைத் தொடர்ந்து மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு அகதிகள் திரும்பிச் சென்று கொண்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. (வி)

## உணவுப்பொருள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டத்துக்குள் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் வர்த்தகர்கள் இப்பொருட்களை பதுக்கி கூடிய விலைகளில் தற்போது விற்பனை செய்வது கவலைதரக்கூடிய செயலென்றும் கூறப்படுகின்றது.

சகல பொருட்களுக்கும் முன்கூட்டியே கட்டுப்பாட்டு விலைகள் நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், குறிப்பாக மண்ணெண்ணை, தேங்காய் எண்ணெய், அரிசி போன்ற பொருட்களை வர்த்தகர்களும், அங்காடி வியாபாரிகளும் தமது இஷ்டப்படி விலைகளைக் கூட்டி விற்றுவருவதாக சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது.

சில மாதங்களுக்கு முன்பு இதுபோன்ற பதுக்கலில் ஈடுபட்ட பல வர்த்தகர்களும், அங்காடி வியாபாரிகளும் தமிழீழ காவல்துறையினரிடம் மாட்டிக்கொண்டது குறிப்பிடத்தக்கது. (வி)

## மீட்புநிதி நேர மாற்றம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நாளை 20-ந் திகதி பிற்பகல் 1 மணி முதல் 3 மணி வரை தமிழீழ மீட்புநிதி சேகரிக்கப்படும் என தமிழீழ மீட்புநிதி பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்த இதழின் இரண்டாம் பக்கத்தில் மேற்படி பகுதியில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை மீட்புநிதி சேகரிக்கப்படும் என்பது மேலே குறிப்பிட்டபடி திருத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

## ஷெல்தாக்குதல்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

25பேருக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

நேற்று காலை முதல் நண்பகல் வரை படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதல்கள் தோப்பு, இடைக்காடு, பத்தைமேனி, நவக்கிரி, அச்சுவேலி, ஆவரங்கால ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்துள்ளன.

இதேவேளையில் இப்பகுதிகளை வட்டமிட்ட ஸ்ரீலங்கா ஹெலிகொப்டர்கள் பலத்த துப்பாக்கிப் பிரயோகத்தை சரமாரியாக மேற்கொண்ட வண்ணம் இருந்தது.

படையினரின் ஷெல் தாக்குதலால் 9 பிள்ளைகளின் தாயான செபமாலை சிசிலியா (55 வயது), ஐயாத்துரை அன்னம்மா (75 வயது) ஆகியோர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். (ஈ-56-159)

## 1993-ல் ஜனாதிபதி

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வடக்கு-கிழக்கு பிரச்னை தொடர்பாக முடிவற்ற யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருப்பதாலும் நாடாளுமன்ற தெரிவுக்குழு தமிழர் பிரச்னை தீர்வுக்கு ஒரு சாதகமான இணக்கத்துக்கு வரத் தவறியதாலும், பாதுகாப்புப் படை அதிகாரிகள் மத்தியில் பதவிப் போட்டி, கருத்துமோதல்கள் அதிகரித்துவருவதாலும் அவர் பாதுகாப்புத் துறையில் சிக்கல்களை சமாளிக்கவேண்டி வருமெனவும் அவர்கள்மேலும் தெரிவித்துள்ளனர்.

## 5 அயிரம்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

யான பயணிகளே தற்போது ஆலங்கேணிப் பகுதியில் தங்கி நிற்கின்றனராம்—

இதேநேரம் யாழ். குடாநாட்டை நோக்கி வவுனியா ஊடாகச் செல்லும் பயணிகளை ஆலங்கேணிப் பகுதியால் செல்லவேண்டாமென்றும் அப்பிரதேசம் தற்போது தடை செய்யப்பட்டுள்ளதாகவும், வவுனியாவினுள் இராணுவத்தினர் பயணிகளுக்கு பணிப்பதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## அயோத்தி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணம்கொண்டும் பாதிப்பு ஏற்படமாட்டாது என்று இவர்கள் உறுதியளித்திருந்த போதும் மசூதி எப்படி தகர்க்கப்பட்டது என்பதை விளக்கும்படி நீதிமன்றம் இவர்களைக் கோரியுள்ளது.

1993-ம் ஆண்டு தை மாதம் 19-ந் திகதி இவர்களை நீதிமன்றத்தில் ஆஜராகும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (வி)

## 25 பேர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் விபரம் வருமாறு:

தில்லைநாதன் (14-வயது) அச்சுவேலி வடக்கு, தோப்பு, செல்வி அபிராமி (14-வயது) நவக்கிரி மேற்கு, செல்வி சிவாஜினி ஆறுமுகம்(19வயது) செல்வி வரலட்சுமி ஆறுமுகம் (20-வயது) இடைக்காடு, ஆச்சிப்பிள்ளை (80-வயது) அச்சுவேலி கதிரிப்பாய், விமலா (25-வயது) தோப்பு அச்சுவேலி லலிதா (20 வயது) தோப்பு அச்சுவேலி யோகராணி அரியநாதம் (32- வயது) தோப்பு, சுமன் (5-வயது) தோப்பு, கௌசி செல்லத்துரை (23-வயது) தோப்பு, மஞ்சு விஜயரட்ணம் (10-வயது) தோப்பு, செல்லத்துரை துரைசிங்கம் (45-வயது) அச்சுவேலி வடக்கு. பலர் இச்சம்பவத்தில் சிறுகாயங்களுக்குள்ளாகினர். (56-159)


## மரண அறிவித்தல்

## திருமதி செசிலியா அலெக்சாண்டர்

(இளைப்பாறிய ஆசிரியர்)

பத்தாவத்தை சம்பிலிப்பு நேரியார் பங்கைப்பிறப்பிடமாகக் கொண்டவரும் மயிலங்கூடல் இன்னாசிமுத்து அலெக்ஸ்சாண்டர் (காலஞ்சென்ற) வசாவிளான் சின்னப்பு இராஜநாயகம் ஆகியோரின் அன்பு மனைவியும், முப்பத்தைந்து வருடம் ஆசிரியர் சேவையில் ஈடுபட்டு அயராது உழைத்தவரும் காலம்சென்ற சவிரிமுத்து பிலிப்புபிள்ளை இராஜநாயகம் என்பவரின் மாமியாரும் ஆகிய திருமதி அலெக்சாண்டர் செசிலியா அவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் கட்டுடை பாலசிங்கம் இல்லத்தில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஞாயிறு (20-12-92) மேற்படி இல்லத்திலும் ஆனைக்கோட்டை அன்னம்மாள் ஆலயத்திலும் 10 மணியளவில் பூரண ஈமச் சடங்குகளுடன் நிறைவேற்றப்படும் இதனைக் கண்ணுற குருக்கள், கன்னியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், உற்றார், உறவினர்கள் நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்று திருமதி M J. P. இராஜநாயகம் இளைப்பாறிய ஆசிரியை அவர்களின் துயரில் பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
M. J. P. இராஜநாயகம்

(சி-7082)